1982 பிப்ரவரி 4]

திரு. எஸ். என். இராமசாமி : பாரஸ்ட் தேரியில் அதிக பனை மரங்கள் இருப்பதால் தனி நபர்கள் ஏலத்தில் எடுத்துக் கொண்டு அரசுக்கு வருமானம் கிடைக்காமல் போய்விடுகிற காரணத்தால், நூறு, இரு நூறு, ஐந்நூறு என்ற பங்கீட்டு முறையில் ஏலத்தில் விட்டால் அரசுக்கு அதிக லாபம் வரும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மொத்தமாக ஏலத்தில் விடப்படவில்லை. பன்னிரெண்டு பகுதிகளாகப் பிரித்துத்தான் ஏலங்கள் விடப்படுகின்றன. ஆகவே, இப்போதுள்ள நடைமுறை பிரித்து விடுகிற நிலைமையில்தான் இருக்கிறது.

சென்னையில் அரசின் சார்பில் 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகளுக்கு சென்னையில் ங்கிட 5 நட்சத்திர அந்தஸ்தில் சுற்றுலா விடுதி அரசின் சார்பில் ட்டிட எண்ணமுண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது எங்கு கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் . (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம் : அண்மைக் காலத்தில் வளைகுடா நாடுகளில் இருந்து சென்னையைத் தவிர மற்றப் பெரு நகரங்களுக்கெல்லாம் பெரும் பணக்காரர்கள் வந்து தங்கி கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சென்னையில் தங்குகிற வகையில் நவீனமான விடுதிகளைச் சுற்றுலா வாரியம் கட்டினால் அதிக வருமானம் வரும். ஆகவே, அதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வெளிநாடுகள், அராபிய நாடுகளில் இருந்து வருகிறவர்கள் தங்குவதற்காக ஐந்து நட்சத்திர ஓட்டலை அரசோ, சுற்றுலாத் துறையோ கட்டுவது என்பது அவ்வளவு லாபகரமாக இருக்காது. அது மிகப் பெரிய முதலீட்டில் நடத்தப்படுகிற ஒரு தொழில். இப்போது தனியார் மிகப் பெரிய அளவில் சென்னை நகரத்திலேயே புதிய ஓட்டல்களை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு சுற்றுலாத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடுத்தர வருவாய்

உள்ளவர்கள் அல்லது குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதிக அளவில் முதலீடு போட்டு நட்டத்தில் நடத்தக் கூடிய முறையில் ஐந்து நட்சத்திர ஓட்டல்களை நடத்துவது சாத்தியமில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அகில இந்தியாவிலிருந்தும் தமிழகத்திற்கு வருகின்ற விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் குறைந்த செலவில் தங்கக் கூடிய முறையிலே மத்திய சென்னை, தென் சென்னை, வட சென்னை ஆகிய இடங்களில் டார்மென்டரி போன்ற தங்குமிடங்கள் கட்டுவதற்கு சுற்றுலா வாரியம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை நகரத்திலே 3 நட்சத்திர தகுதியுள்ள ஒரு விடுதி கட்ட வேண்டுமென்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை குறைந்த செலவிலே தங்குகின்ற வகையில் டார்மெண்டரி போன்ற அந்த தங்குமிடங்களைக் கட்ட வேண்டும் என்பது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் உள்ள திட்டமாகும்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சுற்றுலா வாரியத்தின் சார்பில் நடத்தப்படுகிற தங்கும் விடுதிகள் எத்தனை? அவைகள் எல்லாம் லாபகரமாக நடத்தப்படுகின்றனவா? எனக்குத் தெரிந்தவரை சுற்றுலா வாரியம் நடத்துகின்ற தங்கும் விடுதிகள் லாபகரமாக நடப்பதாக அறிகிறேன். எனவே மீண்டும் அதைப் பரிசீலனை செய்து தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்டுவதற்கு சுற்றுலா வாரியம் முன்வருமா? தனியார்கள் தமிழகத்திலே எத்தனை ஐந்து நட்சத்திர ஓட்டல்களை நடத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகவல்களைச் சேகரித்துத் தரலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சென்னையிலே அதைக் கட்டாவிட்டாலும் கூட—47 வெளி நாடுகளிலிருந்து வந்து 350 குழந்தைகள் கொடைக்கானலிலே உள்ள கான்வென்டிலே படிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?—அங்கேயாவது அப்படிப்பட்ட ஓட்டலைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(பதில் இல்லை)